**செய்தி வெளியீடு எண் : 353** **நாள் : 21.02.2023**

## செய்தி வெளியீடு

# தமிழ் வளர்ச்சித் துறை உள்ளம் உகக்கும் உலகத் தாய்மொழி

உலகத் தாய்மொழி நாள் 21.02.2023 செவ்வாய்க் கிழமை அன்று சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரியில் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

இவ்விழாவில், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் அவர்கள் வரவேற்புரை ஆற்ற, எஸ்.ஐ.இ.டி. தாளாளர் தென்னிந்திய அறக்கட்டளையின் செயலர், முனைவர் பைசூர் ரஹ்மான் சயீத் மற்றும் நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரியின் முதல்வர் முனைவர் அம்துல் அஜீஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்க நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

கலைமாமணி நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் திரு. ஐ. லியோனி அவர்கள் தலைமையில் **தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு துணை நிற்பவை இதழ்களே! தொலைக்காட்சியே ! திரைப்படங்களே !** என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் **இதழ்களே!** எனும் தலைப்பில் மரு. ஜெயராஜமூர்த்தி அவர்களும், **தொலைக்காட்சியே !** எனும் தலைப்பில் பேராசிரியர் விஜயக்குமார் அவர்களும், **திரைப்படங்களே !** என்ற தலைப்பில் கவிஞர் இனியவன் அவர்களும். உரையாற்றினார்கள்.

கவிவேந்தர் மு. மேத்தா அவர்களின் தலைமையில் **தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்,** என்ற பாட்டரங்கத்தில் **திருவள்ளுவரின் அறத்தமிழ்,** எனும் தலைப்பில் கவிஞர் இரா. இளையராஜா அவர்களும், **ஔவையாரின் மறத்தமிழ்** எனும் தலைப்பில் கவிஞர் கங்கை மணிமாறன் அவர்களும், **பாரதியாரின் எழுச்சித் தமிழ்** என்ற தலைப்பில் கவிஞர் தஞ்சை இனியன் அவர்களும், **பாவேந்தரின் புரட்சித் தமிழ்** என்ற தலைப்பில் கவிஞர் ஜான் தன்ராஜ் அவர்களும், **கலைஞரின் முத்தமிழ்** என்ற தலைப்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்களும் கவிதை பாடினார்கள்.

வழக்கறிஞர் திரு.மா.ப. நாதன் அவர்கள் தலைமையில் **நற்றமிழ்த் தடம்பதித்து நிமிர்ந்து நிற்பது**, என்ற இளையோர் அரங்கத்தில் **படைப்புகளில்** என்ற தலைப்பில் ஆசிரியர் சரவணன் அவர்களும், **திரைப்படங்களில்** என்ற தலைப்பில்

செல்வி சா. ஆசிகா ஃபாத்திமா அவர்களும், **வலைதளங்களில்** என்ற தலைப்பில் திரு. மோகநிதி அவர்களும், **மேடைகளில்** என்ற தலைப்பில் செல்வி ஆயிஷா அவர்களும் உரையாற்றினார்கள்.

மாலையில் நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா தாய்மொழி நாள் தகவுரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் முனைவர் இரா. சந்திரசேகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

அதனையடுத்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் மரு. இரா. செல்வராசு அவர்கள்,

"வங்க தேசத்தில் தங்கள் மொழிக்காகப் போராடி உயிர்நீத்த வங்காளிகளை நினைவுகூரும் வகையிலேயே சர்வதேசத் தாய்மொழி நாளாக பிப்ரவரி 21 கொண்டாடப்படுகிறது. மேற்கு பாகிஸ்தானில் ஆட்சிமொழியாக இருந்த உருது 1948–ல் மொத்த நாட்டுக்குமான ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. இந்த நாளை நினைவுகூரும் வகையில் வங்கதேசம் ஆண்டுதோறும் மொழி இயக்க நாளைக் கொண்டாடியது. இந்த நாளை அங்கீகரிக்கும் வகையில் ஐ.நா.வின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ 1999–ல் பிப்ரவரி 21–ஐ மொழிரீதியான பன்மைத்துவத்தைக் கொண்டாடும் நாளாக அறிவித்தது. இந்த நாள்தான் சர்வதேசத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தாய்மொழியின் அவசியமும் அருமையும் நமக்கு நன்கு தெரியும். ஏனெனில், நம் தாய்மொழியைக் காப்பாற்றுவதற்காக நாம் பெரும் போராட்டம் நடத்தி மொழியுணர்வை வெளிப்படுத்தியிருக்கிறோம். சில நூறு மொழிகள் மாத்திரமே பொதுமக்கள் பயன்பாட்டிலும் கல்வியைப் பயிற்றுவிப்பதிலும் வழக்கிலுள்ளன. அதிலும் நூற்றுக்கும் குறைவான மொழிகளே நமது எண்மிய உலகில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய சூழலில் நமது மொழி குறித்து நமக்கு எவ்வளவு கவனம் தேவை என்பதையே இந்த நாளில் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று தாய்மொழி நாளை சீரும் சிறப்புமாக கொண்டாடுவதற்கு சிறந்த பங்காற்றிய நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரியின் நிறுவனர், முதல்வர் மற்றும்

அனைத்துத்துறைப் பேராசியர்கள், மாணவிகள், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்"

என்று விழாப் பேருரையாற்றி நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் மகளிர் கல்லூரிக்கு தாய்மொழி நாள் நினைவுக் கோப்பையினை வழங்கினார்.

பின்னர், சென்னை மாவட்டத்தைச் சார்ந்த அகவை முதிர்ந்த தமிழறிஞர்களான **திரு. கோ. வாசுதேவன், திரு. தே. தீனதயாளன், திரு. சு. ராமராஜ், திரு. க. அய்யாசாமி, திருமதி சு. கலைமணி, திரு.ஆ.அந்தோணி செல்வதாஸ், திரு.பா.ரா.துரை, திரு.மு.நடராஜன், திரு. சா.அ. வேணிற்செல்வன், திருமதி ப. பானுமதி, திரு. வே. நீலகண்டன், திருமதி சீ. காந்திமதி, திரு. வை. மார்டீன்குமார், திரு. மு. தனசேகரன், திரு. பெ. தேசிகவிநாயகம், திரு. ர. ராஜகோபால், திரு. வெ. சோமு, திரு. எ. மெர்வின் ஆகிய** 18 பேருக்கு உதவித் தொகைக்கான அரசாணைகளை வழங்கினார்.

மேலும், சிறந்த நூலுக்கான பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ், 2019ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழுடன் பரிசுத் தொகை ரூ.30,000/–க்கான காசோலையும் அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பாராட்டுச் சான்றிதழுடன் ரூ.10,000/–க்கான காசோலையும் வழங்கினார். அவ்வகையில் **பசி வயிற்றுப் பாச்சோறு எனும் நூலுக்காக** திரு. கி. நரேந்திரன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த வசந்தா பதிப்பகத்திற்கும், வைகைச் செல்வி கவிதைகள் **எனும் நூலுக்காக** வைகைச் செல்வி என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த காவ்யா பதிப்பகத்திற்கும், **சேப்பாயி** எனும் நூலுக்காக திரு. கணேஷ் ராகவன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த டிஸ்கவரி புக் பேலஸ் பதிப்பகத்திற்கும், குருவிக்கதிர் எனும் நூலுக்காக பேரா. அரு. மருத்துரை என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த காவ்யா பதிப்பகத்திற்கும், தேசிய விழா எனும் நூலுக்காக திரு. அ. ஈஸ்வரன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த பாக்யா பப்ளிகேஷன்ஸ் பதிப்பகத்திற்கும், வானமே எல்லை எனும் நூலுக்காக திரு. தீபம் எஸ். திருமலை என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த சஞ்சீவியார் பதிப்பகத்திற்கும், கவிதை மறுமலர்ச்சியில் பாரதி – பாரதிதாசன் எனும் நூலுக்காக முனைவர் எஸ். தங்கமணி என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த மணிவாசகர் பதிப்பகத்திற்கும், பழந்தமிழில் வேறுபடும் வினையடிகள் எனும் நூலுக்காக

முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்திற்கும், ஸ்ரீ பகவத் இராமானுசர் அருளிச் செய்த ஸ்ரீ பாஷ்யம் பகவான் பாதராயணர் அருளிச் செய்த பரஹ்மஸீத்தத்திற்கான பேருரை எனும் நூலுக்காக திரு. க. ஸ்ரீதரன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த நர்மதா பதிப்பகத்திற்கும், யாளி எனும் நூலுக்காக திரு. ச. வைரவராஜன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த பாவைமதி பதிப்பகத்திற்கும், யாழ்ப்பாணத் தமிழ் அகராதி எனும் நூலுக்காக திரு. நடராசா சிறிரஞ்சன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த குமரன் புத்தக இல்லம் பதிப்பகத்திற்கும், பயணம் திறந்த இதயம் எனும் நூலுக்காக மரு. ரா. ஆனந்த குமார் இ.ஆ.ப., என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்திற்கும், நெருப்பாற்றில் நீந்தி வந்தேன் எனும் நூலுக்காக திருநங்கை பத்மினிபிரகாஷ் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த சிவகுரு பதிப்பகத்திற்கும், பாண்டிய நாட்டு வரலாற்று முறை சமூக நிலவியல் எனும் நூலுக்காக திரு. வெ. வேதாசலம் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த தனலட்சுமி பதிப்பகத்திற்கும், **எண்களின் சரித்திரம்** எனும் நூலுக்காக **திருமதி ஜெ. ரோகினி** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **ஸ்ரீ ஆர்.ஜெ.ஓய்** பதிப்பகத்திற்கும், பொறியியல் இயற்பியல் எனும் நூலுக்காக திருமதி பெ. வனிதாமணி என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த ஜெயம் பதிப்பகத்திற்கும், **தமிழ் மக்களின் தொல்சமயம்** எனும் நூலுக்காக **திரு. அ. பாண்டுரங்கன்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **கோரல்** பதிப்பகத்திற்கும், **கள்ளத்தோணி** எனும் நூலுக்காக **திரு. நடராசாசரவணன்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **குமரன் புத்தக இல்லம்** பதிப்பகத்திற்கும், **நீங்கள் ஏன் இன்னும் கோட்டீஸ்வரர் ஆகவில்லை ?** எனும் நூலுக்காக **திரு. இராம்குமார் சிங்காரம்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த தாய் வெளியீடு பதிப்பகத்திற்கும், **இருதய நோய்களும் இன்றைய மருத்துவமும்** எனும் நூலுக்காக **டாக்டர் த.கோ. சாந்திநாதன்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், வர்ம நிதானம்** எனும் நூலுக்காக **முனைவர் தே.ஷீஜா** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **சுவேதம்** பதிப்பகத்திற்கும், **சித்தர் பாடல்களில் இறைக்கோட்பாடு** எனும் நூலுக்காக **சு. சசிகலா** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **காவ்யா** பதிப்பகத்திற்கும், **கற்பித்தல் கற்றல் திறன்கள்** எனும் நூலுக்காக **முனைவர் சி.சேதுராமன்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **அறிவுப்** பதிப்பகத்திற்கும், **வளம் கொழிக்கும் வேளான்**

**தொழில்கள்** எனும் நூலுக்காக திரு. ந. வீரப்பன் (எ) நவீன்குமார் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த யூனிக்யூ மீடியா இன்டகிரேட்டர்ஸ் பதிப்பகத்திற்கும், **இயற்கையோடு இயைந்து** எனும் நூலுக்காக **திரு**. **கன்யூட் ராஜ்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **தாமரை** பதிப்பகத்திற்கும், **உலகை மாற்றும் கணினி** எனும் நூலுக்காக திரு. கோ. பழனி என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த வனிதா பதிப்பகத்திற்கும், **தமிழர் நாட்டுப்புறவியல் களஞ்சியம்** எனும் நூலுக்காக **பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **மணிமேகலை** பதிப்பகத்திற்கும், **இரங்கூன் எழுத்தோவியங்கள்** எனும் நூலுக்காக திரு. சுப.வி. திருஞானம் (எ) வி. சுப்பிரமணியன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த அம்பத்தூர் கம்பன் கழகத்திற்கும், இதழியல் மேலாண்மை எனும் நூலுக்காக திரு. சு. இராமச்சந்திரன் என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் **இதயச்சாரல்** எனும் நூலுக்காக **பேரா**. **டாக்டர்.ச.இளங்கோவன்** என்ற நூலாசிரியருக்கும் சுய வெளியீட்டிற்கும், உடல் திறன் விளையாட்டு எனும் நூலுக்காக திருமதி தே. இராஜலட்சுமி என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த வனிதா பதிப்பகத்திற்கும், எமக்கும் தொழில் எனும் நூலுக்காக திருமதி சு. ஜெயஸ்ரீ என்ற நூலாசிரியருக்கும் சுய வெளியீட்டிற்கும், **செம்மொழித் தமிழில் சீரிய ஆய்வுகள் தொகுதி**–1 (**சங்கத் தமிழர் வாழ்வியல்**) எனும் நூலுக்காக **முனைவர் அ**. **பிச்சை** என்ற நூலாசிரியருக்கும் பதிப்பித்த **கபிலன்** பதிப்பகத்திற்கும் வழங்கப்பட்டது.

இறுதியாக, தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் திருமதி தே. ஜெயஜோதி நன்றியுரை வழங்க உலகத் தாய்மொழி நாள் இனிதே நிறைவுற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in